எல்லாம் இதை மனப்பூர்வமாக வரவேற்பதற்குப் பதிலாக எதிர்க்கின்ற நோக்கத்துடன் எதிர்க்கிறுர்கள் என்று சொன்னல் அதற்காக வருந்தாமல் இருக்க முடியாது.

(திரு. நா. வீராசாமி தலைமை)

ஸ்தாபன காங்கிரஸைச் சார்ந்த மகாவீர் தியாகி கூட மத்திய அரசின் வரவு செலவுத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது Mr. Chavan has proved a talented pick pocket '' என்று கூறியிருக்கிறுர்கள்.

இதையெல்லாம் விட்டுவிட்டு இங்கு ஸ்தாபன காங்கிரஸில் உள்ள ஒருசில உறுப்பினர்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தை கண்டித்ததோடு கலைஞர் அவர்கள் இந்த அவையில் இந்த வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்திருர்கள் என்று சொன்னல் அவர்களுக்கு எவ்வளவு நெஞ்சுரம் இருக்க வேண்டுமென்றும் கூடக் கேட்கிறுர்கள். அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது கலைஞர் அவர்களுக்கு உண்மையிலேயே நெஞ்சுரம் இருக்கிறது. அது இந்த வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதில் மட்டுமல்ல; அவர்கள் வாழ்க்கையிலேயே நெஞ்சுரத்துடன்தான் செயல்படுகிறுர்கள் என்பதையும் அவர்கள் அறிந்துகொள்ளவேண்டும். சமீபத்தில் நடந்த திருமணத்தில் கூட அவர்களது நெஞ்சுரத்தைக் காட்டியிருக்கிறுர்கள்.

அந்த முறையில் இப்படிப்பட்ட நல்லதொரு நிதிநிலை அறிக்கையை அளிக்க அவர்களுக்கு எந்தவிதமான நெஞ்சுரமும் தேவையில்லை. அதற்கு இங்கு எந்தவிதமான அவசியமும் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஏழை எளியவர்கள், பாட்டாளி தொழிலாளி மக்கள், விவசாயிகள், நடுத்தர மக்கள், அரசு அலுவலர்கள் இப்படி எல்லோருக்கும் பயன்படும்படியான அளவிற்கு வேளாண்மைத் துறைக்கு மட்டும் 55 கோடி ரூபாய் இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் விவசாயிகளுக்குக் கடனுக 1973-74-ம் ஆண்டுக்கு கொடுப்பதற்கு 100 கோடி ரூபாய் அளவிற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் இந்த வரவு செலவுத் திட்டத்தில் கண் இழந்தவர்களுக்கு கண் ஒளி வழங்குவதற்காகவும், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டத்திற்காகவும், வழிவகைகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. கைத்தறியாளர்கள் துயர் துடைக்கவும், தொழில் வளர்ச்சிக்காக ஸிட்கோ, ஸிப்காட், டான்ஸி மூலம் கடன் வழங்கவும் இந்த வரவு செலவுத் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. கிராம முன்னேற்றம், சாலை இணைப்புகள் போன்றவற்றை அமல் நடத்தவும் ஊராட்சி ஒன்றியங்கள் முன்பு ஏ,பி,ஸி,டி, என்று இருந்ததை மாற்றி இப்போது ஆறு பகுதிகளாகப் பிரித்திருப்பதால்

ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிக மானியம் கிடைக்கக்கூடிய வகையிலும் இந்த வரவு செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது.

குடிசை மாற்று வாரியம், குடிநீர் வாரியம், குடியிருப்பு மனைச் சட்டம் முதலியவை நல்லமுறையில் அமல்படுத்தப்பட்டிருக்கின்றன.

அரசு அலுவலர்களுக்கு ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாக சம்பளம் வாங்குகிறவர்களுக்கு பத்து ரூபாய் அகவிலைப்படி கூடுதலாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்னையில் விட்டு வாடகைப்படி 15 சதவிகிதம் ஆகவும் மற்றபடி தகுந்த அளவிலும் உயர்த்தப்பட்டிருக்கிறது. இங்கு எடுத்துக் கூறினார்கள், அந்த பத்து ரூபாயை ப்ராவிடண்ட் பண்டில் சேர்ப்பதற்குப் பதிலாக அவர்கள் கையிலே கொடுத்துவிட வேண்டுமென்று கூறினார்கள். இதைப் பார்க்கும்போது அவர்கள் எண்ணுகிறார்கள், அரசாங்க அலுவலர்கள் அத்தனை பேர்களும் கையில் கிடைக்கிற சம்பளம் முழுவதையும் அந்தந்த மாதத்திலேயே அவர்கள் செலவழிப்பதுபோலவும் ஆக இந்த பத்து ரூபாயை அவர்கள் கையில் கொடுத்தால்தான் அவர்களுக்கு நன்மை கிடைக்கும் என்ற நிலையில் எண்ணுகிறார்கள். உண்மை அப்படி அல்ல. இப்போது கொடுக்கப்படும் இந்த பத்து ரூபாயையும் அவர்கள் கையில் கொடுத்துவிட்டால் அதிகமாகச் செலவு செய்து விடுவார்கள். எனவே அதை அவர்கள் க்ஷேம நல நிதிக் கணக்கில் வைத்து விட்டால் அது அரசாங்க அலுவலர்களுக்குத்தான் உதவியாக இருக்குமே தவிர உடனடியாக அவர்கள் கையில் இந்த பத்து ரூபாயைக் கொடுப்பதால் அவர்கள் பயனடைவார்கள் என்று சொல்லமுடியாது. அவர்களுக்கு இரண்டு முறைகளில் அரசாங்கம் உதவி செய்திருக்கிறது. தாழ்த்தப்பட்டோர் நலனுக்காகவும் இந்த நிதிநிலை அறிக்கையில் நல்ல முறையில் வகை செய்யப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் மேலாக உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற முறையில் குத்தகைக்கு உழுது பாடுபட்டு வருகிற உழவர்களுக்கு அந்த நிலமே சொந்தமாகும் முறையில் சட்டம் கொண்டுவரப்படுவதோடு, அவர்களுக்கு நிதி உதவி அளிக்கவும் குத்தகைதாரர் நிதி உதவிக் கழகம் என்று ஒன்று அமைக்கப்படுவது உலக வரலாற்றிலேயே இல்லாத ஒரு புரட்சிகரமான திட்டமாகும் என்பது நான் கூறாமல் விளங்கும். பூர்ஷ்வா கூட்டத்தை, பணக்கார ஆதிக்கத்தை ஒழித்து, 30 சதவிகிதம் உள்ள ஏழை எளியவர்கள், பாட்டாளிகள் இவர்களுக்கு நன்மை செய்கிற இந்த வரவு செலவுத் திட்டத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். கடைசியாக (மணியடிக்கப்பட்டது.) குமரி மாவட்டத்திற்கு வருகிறேன். குமரி மாவட்டத்தை பொறுத்தவரையில் அங்கு ஒன்றுமே செய்யவில்லை என்ற

தப்பான ஒரு கருத்து நிலவி வருகிறது. ஆனல் அப்படி அல்ல என்பதை எடுத்துக்காட்டுவதற்காக இங்கே டீட்டெயில்ட் பப்ளிக் வொர்க்ஸ் பட்ஜட் புத்தகத்தில் 226-ம் பக்கத்திலிருந்து 261-ம் பக்கம் வரை பார்த்தோமானல் பள்ளிக்கூடங்கள் கட்ட, விஞ்ஞான ஆய்வுக்கூடங்கள் கட்ட, கட்டி முடித்தது இவற்றிற்காக லட்சம் அல்ல கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்யப் பட்டிருக்கிறது. அதேபோல பாமிலி ப்ளானிங் சென்டேர்ஸ், சர்ஜிக்கல் வார்ட்ஸ் கட்டுவதற்கும் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): இன்றையதினம் இருபது உறுப்பினர்கள் பேச இருக்கிருர்கள். ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஏழு நிமிடங்களுக்குள்ளாக அவர்கள் பேச்சை முடித்துக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, திரு. கே. பி. கோபால்.

*** திரு. கே. பி. கோபால்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1973-74-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களை கூற வாய்ப்பளித்தமைக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணு வழியில் அயராது பணி புரியும் அரசு என்று கூறிக்கொண்டும் அரசுத் திட்டங்களுக்கு அப்பாற்பட்ட செலவினங்களில் சிக்கனம் என்றும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இவர்களுக்கு ஊதிய உயர்வு ஏற்றமுடியாத தற்கு நிதிப் பற்றுக்குறையைக் காரணம் காட்டி அதற்கு மாருக அரசு விளம்பரங்களிலும் ஆடம்பர விழாக்களிலும் செலவு செய்வதைப்பற்றி முதலில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அண்ணு வழி செல்லும் அரசு என்று கூறினர்கள். அறிஞர் அண்ணு அவர்கள் முதல் அமைச்சராக இரண்டு ஆண்டுக் காலம் இருந்தபோது பத்திரிகைகளுக்கும், தினத்தாள்களுக்கும் கொடுத்த விளம்பரங்களுக்கான செலவு மொத்தம் ரூ. 2.18 லட்சம். அடுத்த நான்காண்டுகளில் இந்த பத்திரிகைகள், தினத்தாள்கள் இவற்றிற்கு கொடுத்த விளம்பரங்களுக்கான செலவு ரூ. 35.18 லட்சம். இதுதான் அண்ணு வழியா என்று முதலில் கேட்க விரும்புகிறேன்.

இரண்டாவதாக, இதுபோன்ற விளம்பரங்கள் கொடுப்பதில் ஒருசில வழிமுறைகள் உள்ளன. டிசம்பர் மாதம் நடந்த பரிசுச் சீட்டுக் குலுக்கலுக்கு சனவரி மாதம் முரசொலியில் விளம்பரம் கொடுக்கப்படுகிறது. சனவரி மாதம் 10-ம் தேதி பரிசுச் சீட்டு குலுக்கல், 11-ம் தேதி தினத்தந்தி, தினமணி போன்ற முக்கியமான பத்திரிகைகளில் இலவசமாகவே செய்தி என்று அவர்கள் செய்தி தெரிவித்திருக்கிருர்கள். அப்படியிருந்தும் முரசொலியில் சனவரி 12-ம் தேதி அதுவும் ஒரு விளம்பரமாக வருகிறது. அண்ணு அவர்கள் முதல் அமைச்சராக